# இயல் - 1 மரபுச்சொற்கள்

I. **மரபு என்றால் என்ன?**

நம் முன்னோர்கள் ஒரு பொருளை எவ்வாறு வழங்கினரோ அவ்வாறே நாமும் வழங்குவது மரபு ஆகும்

II. **சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக**

1. நம் முன்னோர்கள் ஒரு சொல்லை சொல்லியவாறே நாமும் சொல்வது மரபு

அ). பழைமை ஆ). புதுமை இ). மரபு ஈ). சிறப்பு

2. யானை பிளிறும்

அ). கத்தும் ஆ). பிளிறும் இ). கூவும் ஈ). அலறும்

3. ஆந்தை அலறும் என்பது ஒலி மரபு

அ). ஒலி மரபு இ). வினை மரபு

ஆ). இளமைப் பெயர் மரபு ஈ). இருப்பிடப் பெயர் மரபு

4. புலியின் இளமைப் பெயர் புலிப்பறழ்

அ). புலிப்பறழ் ஆ). புலிக்கன்று

இ). புலிக்குட்டி ஈ). புளிப்பிள்ளை

5. 'பூப்பறித்தாள்' என்பது வினை மரபு

அ). வினை மரபு ஆ). பெயர் மரபு

இ). ஒலி மரபு ஈ). இளமைப் பெயர் மரபு

III. **ஒலி மரபுகளைப் பொருத்துக : ( நேர்ப்படுத்தி எழுதுக )**

| | | |
|---|---|---|
| 1. | சிங்கம் | கூவும் |
| 2. | அணில் | அலப்பும் |
| 3. | மயில் | முழங்கும் |
| 4. | குயில் | கீச்சிடும் |
| 5. | குரங்கு | அகவும் |

| | | |
|---|---|---|
| 1. | சிங்கம் | முழங்கும் |
| 2. | அணில் | கீச்சிடும் |
| 3. | மயில் | அகவும் |
| 4. | குயில் | கூவும் |
| 5. | குரங்கு | அலப்பும் |

**IV. வினை மரபுகளைப் பொருத்துக :( நேர்ப்படுத்தி எழுதுக )**

| | | |
|---|---|---|
| 1. | நீர் | பறித்தாள் |
| 2. | முறுக்கு | எய்தான் |
| 3. | உணவு | குடித்தான் |
| 4. | அம்பு | தின்றான் |
| 5. | பூ | உண்டான் |

| | | |
|---|---|---|
| 1. | நீர் | குடித்தான் |
| 2. | முறுக்கு | தின்றான் |
| 3. | உணவு | உண்டான் |
| 4. | அம்பு | எய்தான் |
| 5. | பூ | பறித்தாள் |

**V. கோட்டிட்ட இடங்களை நிரப்புக :**
(இலை, ஓலை, பிஞ்சு, தட்டை, தாள்)

1. அவரை - பிஞ்சு
2. கேழ்வரகு - தட்டை
3. வாழை - இலை
4. நெல் - தாள்
5. பனை - ஓலை

## VI உயிரினங்களின் ஒலி மரபை வட்டமிடுக :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. மயில் | அகவும் | அகவும் | கூவும் | பிளிறும் | கத்தும் |
| 2. கிளி | பேசும் | அலப்பும் | பேசும் | கூவும் | கீச்சிடும் |
| 3. குரங்கு | அலப்பும் | அகவும் | கீச்சிடும் | அலப்பும் | சீறும் |
| 4. ஆடு | கத்தும் | பேசும் | பிளிறும் | கூவும் | கத்தும் |
| 5. குயில் | கூவும் | அலப்பும் | பிளிறும் | அகவும் | கூவும் |
| 6. யானை | பிளிறும் | கத்தும் | கர்ச்சிக்கும் | உறுமும் | பிளிறும் |

## VII . செயல்பாடு

தகுந்த மரபுச் சொற்களால் கோடிட்ட இடத்தை நிரப்புக :-

1. நாய் திருடனைப் பார்த்துக் குரைத்தது
   (கத்தியது / குரைத்தது)
2. திருவள்ளுவர் பாடலை இயற்றினார்
   (எழுதினார் / இயற்றினார்)
3. மாடுகளுடைய வாழிடம் தொழுவம்
   (பண்ணை / தொழுவம்)
4. கார்மேகத்தைப் பார்த்த மயில் அகவியது
   (கரைந்தது / அகவியது)
5. ஆறுமுகம் சோறு உண்டான்
   (உண்டான் / தின்றான்)